★ அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தகவல்

# மாவீரர்களின் பெற்றோரை விரைவில் தலைவர் பிரபாகரன் சந்திக்கவுள்ளார்



தமிழீழ விடுதலைக்காகப் போராடி மரணித்த மாவீரர்களின் பெற்றோர்களை விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் சந்திக்கவுள்ளார். இத் தகவலை மக்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர்கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டார். வல்வெட்டி ஊரிக்காட்டு வீதி, வல்விச்சி கோயிலடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவீரர் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்து அவர் பேசினார். ''தான் 28-ம் திகதி காலை தலைவரைச் சந்தித்தபோது அவரைச் சந்திக்கத் துடிக்கும் மக்களின் ஆவலை எடுத்துரைத்ததாகவும் தமிழீழ இலட்சியம் — 4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 05 ஒலி 03 பிரமோதூத கார்த்திகை 14 (30-11-1990) வெள்ளி

பௌத்த சிங்கள கனவுக்கும் தமிழர் சுயநிர்ணய உரிமைக்கும் வெகுதூரம்

# வாக்குறுதியை நிறைவேற்ற தவறியதே போருக்கு காரணம்

## ஸ்ரீலங்கா மீது உலகத் திருச்சபை கண்டனம்

"அரசாங்கம் விடுதலைப்புலிகளை வெல்வதற்காக போராடுகிறதா அல்லது ஸ்ரீலங்காவின் சுயநிர்ணய உரிமைக்கும் சமத்துவத்துக்குமான தமிழர்களுடைய உரிமைகளுக்கு ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறதா? இதுவே அடிப்படைக்கேள்வி."

இவ்வாறு இனவாதத்துக்கு எதிராகப் போராடும் இயக்கத்தின் செயலாளர் பொப்ஸ் கொட் தெரிவித்துள்ளார்.

இவ்வியக்கம் உலகத்திருச்சபைகளின் பேரவையின் ஓர் அங்கமாகும். திரு. பொப்ஸ் கொட் இயக்கத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய செயலாளராவர்.

தனது விமானிகளின் கணிப்புகளில் தவறுகள் ஏற்பட்டுள்ளதையும் அதனால் குடிமக்களின் மரணங்கள் அதிகரித்துள்ளதையும் அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது.

வாக்களித்தபடி அரசியல் யாப்பின் 6ஆவது திருத்தத்தை இரத்துச்செய்ய அரசு தவறியதும் செல்வாக்கிழந்த —04 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைப் போராளிகள் குறித்து

## வெள்ளை அறிக்கை தயாரிக்கும் அவசியம் தமிழகத்திற்கு இல்லை

தமிழ் நாட்டில் இலங்கைப் போராளிகளின் நடமாட்டம் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பாரதிய ஜனதாக் கட்சித்தலைவர் அத்வானியின் வேண்டுகோளை முதலமைச்சர் மு. கருணாநிதி நிராகரித்துள்ளார்.

இத்தகைய வெள்ளை அறிக்கைகளை தயாரிக்கும் அவசியம் தமிழக அரசிற்கு இல்லை எனக் குறிப்பிட்ட முதலமைச்சர், தமிழ் போராளிகள் குறித்து விரைவில் இந்தியப்பிரதமர் சந்திரசேகருடன் தாம் பேச்சு நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கீரிமலை, கட்டுவனில் ராணுவம் முன்னேற முயற்சி தோல்வி

நேற்றுக்காலை 6 மணியளவில் கீரிமலை கிருஷ்ணர் கோவில் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கீரிமலையை நோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்குதலையடுத்து இராணுவத்தினர் காயமடைந்த இராணுவத்தினரையும் தூக்கிக் கொண்டு சிதறி ஓடினர். இதனைத் தொடர்ந்து பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை நேற்றுக் காலை 10 மணியளவில் கட்டுவனிலிருந்து மல்லாகம் புகையிரத நிலையத்தை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீதும் விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்கினர். இங்கும் படையினர் பின்வாங்கித் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர். (48

## சைவ வித்தியா விருத்திச்சங்கம்

## பல்கலை. கிழக்கு மாணவர்க்கு தினமும் மதிய போசனம்

யாழ் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த யாழ் பல்கலைக்கழக மாணவர் முப்பத்து ஏழு பேருக்கு தினமும் மதிய போசனம் வழங்குவதெனத் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நூற்றேழு மாணவர்கள் உள்ளனர்.

## பலாலி, மட்டக்களப்பு

## பயிற்சிக் கலாசாலைகளை அரசு அட்டாளைச்சேனைக்கு மாற்றத்திட்டம்

விஞ்ஞான ஆசிரியப் பயிற்சியைப் பலாலியிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் அட்டாளைச் சேனை முஸ்லிம் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றுவதென அரசு தீர்மானித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்நடவடிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாக ஆட்சேபித்துள்ளது.

இம்முயற்சியைக் கைவிடுமாறும்பழையஇடங்களிலேயே தொடர்ந்தும் இயங்க அனுமதிக்க வேண்டுமென்றும் கல்வியமைச்சை இச் சங்கம் வற்புறுத்தியுள்ளது.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் அடுத்த வருடம் ஆசிரியர் பயிற்சித் தேர்வுக் —4 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிலுநர் நியமனமே கிடைக்கும்

தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனமே வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்ளுக்கு ஆரம்ப ஆசிரியர் நியமனம் வழங்க படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது கல்வித் திணைக்களத்திற்த கல்விச் சேவை ஆணைக்குழுவிலிருந்து அனுப்பிவைக்கபபட்டுள்ள சுற்று நிருபமொன்றில் தொண்டர் ஆசிரியர்களுக்குப் பயிலுநர் ஆசிரிய நியமனமே —4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் தொழில் நுட்பக்கல்லூரி

## 1989 கல்வியாண்டு பரீட்சை 1991 ஜனவரியில் நடைபெறும்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி 1989 கழக ஆண்டு மாணவர்களுக்குரிய பரீட்சை 1991 ஜனவரி நடுப்பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளரினால் கல்லூரி அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பரீட்சைக்குரிய விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் போது கட்டணங்கள் ஏதுமின்றியும் இப்பரீட்சைக்குரிய இறுதித் திகதியினை மேலும் நீடிக்கும்படி அதிபர் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளதையடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-11)

## கிளிநொச்சியில் விவசாய பீடம் மாணவர் சமுகம்தர அறிவிப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம் எதிர்வரும் 2-ம் திகதி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

விரிவுரைகள் மறுதினம் —4 ஆம் பக்கம் பார்க்க

தாக்குதலின் பின் 'மாங்குளம்'

விபரம் பக்கம் 3 இல்

## கட்டாக்காலி நாய்கள் 5-ம் திகதி முதல் பிடிக்கப்படும்

யாழ் மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. நாய்க்கடியினால் இதுவரை பல பொதுமக்கள் மரணமடைந்துள்ளதுடன் தகுந்த மருந்துவகை இல்லாமல் —40 ஆம் பக்கம் பார்க்க

குத்தகை விளம்பரம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல் - 1991

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கடைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை 1991-ம் ஆண்டு தை மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 1991ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆந் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12.12.1990ஆந் திகதி நண்பகல் 12 00 மணிவரை வலிகாமம் தெற்குப் பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப் பத்திரப்பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 10.12.1990 ஆந் திகதி நண்பகல் 12 00 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டையுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 12.12.1990ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மூலப்பிரதியை குறிப்பிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 'விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என விலாசமிட்டுப் போடுதல் வேண்டும் இணைப் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சிப் பணிமனை, யாழ்ப்பாணம்' என விலாசமிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'இன்ன குத்தகைக்கான கேள்வி' எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

கேள்விகள் யாவும் 12 12.1990ஆந் திகதி பிற்பகல் 02 00 மணிக்குத் திறக்கப்படும். இச்சமயத்தில் கேள்விக்காரர் யாவரும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்வியையோ அல்லது அதன் பகுதியையே ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைய குத்தகையை எடுத்து நடாத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. சென்ற ஆண்டுகளில் கேள்வி நிபந்தனைகளை மீறியவர்களும், 1990ஆம் ஆண்டு நிலுவைகளை ஒழுங்காகச் செலுத்தாதவர்களும் இம்முறை கேள்விகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவார்கள். சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களிடமிருந்து பெற்ற அனுமதிக் கடிதங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சுன்னாகம் சந்தையிலுள்ள எந்தக் கட்டிடத்தையும் அலுவலகமாகப் பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

உடுவில், ஏழாலை உப அலுவலகங்களின் கீழ்வரும் இறைச்சிக் கடைகளுக்கு காணி/ கடைச் சொந்தக்காரர்களிடமிருந்து சம்மதக் கடிதம் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். கொல்லப்படும் மிருகங்கள் யாவும் வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம் உப அலுவலகத்தால் அமைக்கப்பட்ட கொல்களத்திலேயே வெட்டப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அறிய விரும்பின் அலுவலக நாட்களில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலி-தெற்கு பிரதேச சபை.

வலி-தெற்கு பிரதேச சபை
சுன்னாகம். 24.11.90

சுன்னாகம் உப அலுவலகம்

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிகமாகச் செலுத்த வேண்டிய மாதவாடகை | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. சுன்னாகம் மத்திய சந்தை | 100.00 | — | 1000 00 | 780,000 00 |
| 2. மாட்டிறைச்சிக்கடை(மீ இல.1) | 100.00 | 100 00 | 1000 00 | 178,000 00 |
| 3 ஆட்டிறைச்சிக்கடை(மீ.இல.2) | 50 00 | 100.00 | 500 00 | 55,000.00 |
| 4. கருவாட்டுக்கடை-3 | 15.00 | 60 00 | 100.00 | 1,350 00 |
| 5. கருவாட்டுக்கடை-4 | 15.00 | 60 00 | 100 00 | 1,700.00 |
| 6. கருவாட்டுக்கடை-5 | 15.00 | 60.00 | 100 00 | 1,500 00 |
| 7. கருவாட்டுக்கடை-6 | 15.00 | 60 00 | 100 00 | 1,350.00 |
| 8. கருவாட்டுக்கடை-7 | 15.00 | 60.00 | 100 00 | 1,500.00 |
| 9. உடுவில் சந்தை | 50.00 | — | 500 00 | 6,000.00 |
| 10. உமல், கடதாசி விற்பனை செய்யும் உரிமை | 15.00 | — | 500.00 | 8,000 00 |
| **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. மருதனார்மடம் சந்தை | 50 00 | — | 1000.00 | 100,000.00 |
| 2. இணுவில் சந்தை | 50 00 | — | 1000 00 | 6 000.00 |
| 3. ,, ,, ஆட்டிறைச்சிக்கடை | 25.00 | — | 100 00 | 5,100 00 |
| 4. தாவடி ஆட்டிறைச்சிக்கடை | 25.00 | — | 100.00 | 11 400 00 |
| 5. தாவடி மாட்டிறைச்சிக்கடை | 25 00 | — | 100.00 | 7,000 00 |
| 6. மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 25.00 | — | 100.00 | 7,000.00 |
| 7. இணுவில்சந்தைவெளிக்கடைகள் | | | | |
| அ. இல 1, 2 | 25 00 | — | 100.00 | 600 00 |
| ஆ. இல. 8 | 25.00 | — | 100 00 | 300.00 |
| இ இல. 9 | 25.00 | — | 100.00 | 300 00 |
| ஈ. இல. 13 | 25 00 | — | 100 00 | 500 00 |
| 8. இணுவில் சந்தைக்கடை இல. 2 | 100.00 | 160.00 | 1000 00 | 50,000.00 |
| (இக்கடைக்கு கேள்வித் தொகை ஒரே தடவையில் செலுத்தியபின்னர் மாதாந்த வாடகை அறவிடப்படும்) | | | | |
| **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. ஏழாலை தெற்கு சந்தை | 25 00 | — | 50.00 | 400.00 |
| 2. குப்பிளான் சந்தை | 25 00 | | 100 00 | 1,200.00 |
| 3. மாட்டிறைச்சிக்கடை(மயிலங்காடு) | 50.00 | — | 300.00 | 6,000 00 |

11154

# பத்துத் தலைமுறைகளைக் கண்ட நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை

அவள் ஓர் இளம் பெண். ஒரு நாள் அவள் எதையோ எடுப்பதற்காக வலக்கையை மேலே தூக்கினாள். தூக்கிய கை தூக்கிய நிலையிலேயே நின்று விட்டது! மீண்டும் கீழே விடக் கூடவில்லை. நோவும் தாழ முடியவில்லை. அருகில் யாராவது சென்று கையைத் தொட்டாலே துடிதுடித்து ஓ எனக்கதறி அழுகிறாள். என்ன செய்வது?

பெண்ணை அக்காலத்திலே (இன்றுங்கூடத்தான்) மிகப் பிரசித்தி பெற்ற நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்திய சாலைக்குக் கொண்டு வருகிறார்கள். தலைமை வைத்தியரும் வைத்தியசாலையின் மேலாளருமான வெற்றிவேற்பிள்ளை மயில்வாகனப் பண்டிதர் நோயாளியைப் பார்வையிடுகிறார். முறிவு. தறிவு வைத்தியம் அவரது பரம்பரைச் சொத்து; கைவந்தகலை.

ஆனால் பெண்ணோ அருகில் நெருங்கவும் விடாது அலறித் துடிக்கும் போது அவரால் என்ன செய்ய முடியும்? பண்டிதரின் மூளை வேலை செய்கிறது "பிள்ளை, நீ கிணற்றடிக்குப் போ. இந்தக் குடத்தில் தண்ணீர் நிரப்பி விடுவார்கள் நீ செய்ய வேண்டியது குறுக்குக் கட்டாக ஒரு சேலையைக் கட்டிக் கொண்டு உனது இடதுபக்க இடுப்பில் தூக்கி வைக்கும் குடத்தை இடக்கையால் தாங்கிச் சுமந்து வா" என்று அவர் சொன்னதைக் கேட்டவர்களுக்கு வியப்பாகத்தான் இருந்திருக்கும் . பெண்ணுக்கோ வியப்போடு திகைப்பும் உண்டாயிற்று. ஆனால் அவளோ அவளுடன் வந்தவர்களோ பண்டிதரின் கட்டளைக்கு மறுப்புச் சொல்லவில்லை 'வினோதமான வைத்தியம்தான்' என்று மனத்தினுள்ளே நினைத்திருப்பார்கள்!

பண்டிதரின் கட்டளைப்படி நீர்க்குடத்தை இடப்பக்க ஒக்கலையில் சுமந்து கொண்டு மேலே தூக்கிய கை தூக்கியபடியே இருக்கப் பண்டிதர் முன்னால் பெண்வருகிறாள். பண்டிதர் திடீரென்று துச்சாதனனாய் மாறிப் பெண்ணின் குறுக்குக் கட்டுச் சேலையை உரிந்து விடுகிறார்.

கையிலும் பெரிதாக மானத்தைக் கருதிய பெண் என்ன செய்வாள்? பாவம். தனது வலக்கையைப் பக்கென்று மடக்கிச் சேலைத் தலைப்பைப் பிடித்துத் தன் மானத்தைக் காத்துக் கொள்கிறாள். மானத்தை மட்டுமா? மடங்காது மேலெழுந்த அவள் கையும் மடங்கிப் பழைய நிலைக்கு வந்து விட்டதே!

மயில்வாகனப் பண்டிதர் அவர்களின் வைத்திய மேதாவிலாசத்துக்கு எள்ளளவும் குறையாத இந்த மதியூகம் பற்றி இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்ட அற்புத சம்பவம் தான் இது!

1913-ஆம் ஆண்டு இவ்வைத்தியசாலைக்குத் தம் பாரியாருடன் வருகை புரிந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இதன் சிறப்புப் பற்றிப் பலபட புகழ்ந்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். சிறப்பாக இங்கு பேணிப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பழம்பெரும் ஆயுர்வேத வைத்திய நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் அவரைப் பெரிதும் கவர்ந்தமையை வைத்தியசாலைப் பதிவேடு இன்றும் சான்றாக நின்று வெளிப்படுத்துகின்றது.

ஆயுர்வேதம், சித்தவைத்தியம் என்ற இருதுறைகளிலும் துறைபோன வைத்திய மேதைகள் பரம்பரை பரம்பரையாக இங்கு பெரும்பணியாற்றி வந்துள்ளனர் முறிவு தறிவு வைத்தியம் அதனோடு தொடர்பான சத்திரசிகிச்சை என்ற இரண்டிலும் தமிழீழத்தில் மட்டுமன்றி அகில இலங்கையிலுமே உள்ள ஒரே ஒரு வைத்தியசாலை நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலைதான் என்பதையும் அவ்விடத்தில் ஈழத்தமிழராகிய நாம் பெருமையுடன் நினைவுகூரலாம்.

உடற்பிணி போக்கும் வைத்தியத்துறையில் மட்டுமன்றி ஆன்மாவைப் பீடித்து வருத்தும் மலப்பிணியையும் போக்கும் சமய ஆசாரத்தையும், பத்தியையும், ஒழுக்க நெறிகளையும் இவ்வைத்தியசாலையின் தாபகர்கள் கண்ணெனப் போற்றி வந்தமையும் கருதத்தக்கதாகும்.

தலைமை வைத்தியராயும் முகாமையாளராயும் விளங்கி இதற்குப் பெருமை சேர்த்த மயில்வாகனப் பண்டிதர், தாம் எழுதிய மரணசாசனத்தில் குறித்துள்ள பின்வரும் விடயம் அவரது உன்னத குறிக்கோளையும் உயர்ந்த மனப்பாங்கையும் எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

"......மேற்குறித்த இவர்கள் (பண்டிதருக்குப் பின் வைத்தியசாலையின் முகாமையாளர், உதவிமுகாமையாளர், பணியாற்றும் வைத்தியர்கள் ஆகியோர்) சைவ சமயப்படி விசேட தீட்சை பெற்றவராய் வியபிசாரம், மது மாமிச போசனம் களவு, பொய், சூது முதலிய குற்றங்கள் இல்லாதவராய் நல் ஒழுக்கம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்".

—4 ஆம் பக்கம் பார்க்க

PERSONAL CLASSES
B. M. C. - முன்லேன் - Jaffna.
★ 92 A/L விஞ்ஞானப் பிரிவு
ஆரம்பம்:- 01-12-90 Sat. 2.30 p.m
★ 90 A/ L விசேட வினாவிடை - Sat. 7. 30 a. m.
★ 91 A/ L புதிய பிரிவு - Sat. 2. 30 p m
(எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் - தூய, பிரயோக கணித பிரபல ஆசிரியரும் இணைந்து கொள்கிறார்.)
(21, மணல்தறைலேன் மாணவரும் இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ளவும்)
11155 விபரங்கள்- நேரில்

மாங்குளம் தாக்குதல்; மேலும் பல பிரத்தியேகத் தகவல்கள்

# பிணம் குதறக் காட்டில் நாய்களும் நரிகளும் போட்டி

# ஆயுதத்தைவீசிவிட்டுஉணவுக்கு அலையும்சிப்பாய்கள்

(ஸ்தலத்திலிருந்து நமது நிருபர் கே. சந்திரசேகரம்)

மாங்குள இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட வேளை காயங்களுடன் காடுகளுக்குள் தப்பியோடிய பல இராணுவத்தினரின் சடலங்கள் காடுகளுக்குள் அழுகிய நிலையில் சிதைவுற்றுக் காணப்படுவதாகவும் இவற்றை உண்ணக் காட்டுநரிகளும் நாய்களும் போட்டியிடுவதாகவும், இவற்றினால் மாங்குளம் பகுதியெங்கும் பிணவாடை வீசுவதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன

### தனித்தனியாக சிதறி ஓடினர்

இராணுவ முகாம் தாக்கப்படும் வேளை முகாமின் கிழக்கு, மேற்குப் பகுதிகளினால் இராணுவத்தினர் குழுக்களாகவும், தனித்தனியாகவும் சிதறி ஓடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு காட்டுக்குள் ஓடிய இராணுவத்தினர் காடுகளுக்குள உணவோ. நீரோ அற்ற நிலையில் அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### உணவு தேடி அலையும் இராணுவம்

காட்டுக்குள் சென்ற இராணுவத்தினரில் சிலர் தமது ஆயுதங்களை வீசி எறிந்துவிட்டு சாதாரண கிராமவாசிகள் போல் கனகராயன்குளப் பகுதியில் உள்ள குடிமனைகளுக்குள் உணவு தேடிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவு கிடைக்காததினால் பசிஏற்படாதிருப்பதற்காக தாங்கள் முன்னர் பெற்ற பயிற்சியின் அடிப்படையில் பீடி இலைகளை உண்டதாக இவர்கள் தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### காலம் மாறுகிறது

காடுகளுக்குள் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரைத் தொடர்ந்து தேடி வருகின்றனர். 'முன்னர் இராணுவம் எங்களைத்தேடி வலைவிரித்திருந்தது. இப்போது நாங்கள் காடுகளில் இராணுவத்தினரைத் தேடி வலைவிரித்துள்ளோம்' என தேடுதலில் ஈடுபட்டிருந்த போராளி ஒருவர் தெரிவித்தார்.

### 150 ஏக்கர் விஸ்தீரணம்

மாங்குளம் இராணுவ முகாம் 5 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாக 1972-ம் ஆண்டு சோதனை தடை முகாம் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன் ப. நோ. கூ. சங்கம், தபால் அலுவலகம், பொலிஸ் நிலையம், பால்சபை, பெருந்தெருக்கள் திணைக்களம், வைத்திய சாலை, கத்தோலிக்க ஆலயம், மடம், வாடிவீடு என்பனவற்றின் கட்டிடங்கள் உள்ளிட்ட 150 ஏக்கர் விஸ்தீரணம் உள்ளதாக இம் முகாம் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. தற்போது இக்கட்டிடங்களில் அனேகமானவை சேதமடைந்துள்ளன.

### 67 சென்ரிகள் 5 பெரிய பங்கர்கள்

கண்டிவீதியின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள இந்த இராணுவ முகாமில் சுற்றிவர 67 பெரிய காவல் அரண்களும் அவற்றுக்கருகில் தலா ஒவ்வொரு பங்கர்களும் அமைக்கப்பட்டிருந்தன. முகாமின் மத்தியில் பெருமளவு இராணுவத்தினர் பதுங்கக் கூடிய பலம் மிக்க 5 பெரிய பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன.

முகாமில் ஒருசிறிய இராணுவ வைத்தியசாலையும் செயற்பட்ட தடயங்கள் காணப்பட்டன இவற்றில் காயமடைந்த பல இராணுவத்தினர் சிகிச்சை பெற்றதற்கான பதிவுகளும், அறிகுறிகளும் காணப்பட்டன.

### இரு பெரிய எண்ணெய் தாங்கிகள்

இதுதவிர இரு பெரிய எரிபொருள் சேமிப்புத்தாங்கிகள் இந்த முகாமின் பின் பகுதியில் காணப்பட்டன. இவற்றில் எரிபொருட்கள் சேமித்து வைக்கப்பட்டு முல்லைத்தீவு. ஒட்டுச்சுட்டான், கிளிநொச்சி, ஆனையிறவு முகாம்களுக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமையலறையில் 2000 இறைச்சிரின்களும், 1000 பெரிய மீன் ரின்களும், 500 மூடை நெத்தலிக் கருவாடும், மற்றும் கடலை, அரிசி, பருப்பு, கோதுமை மா மூடைகள் பெருமளவிலும் காணப்பட்டு மீட்கப்பட்டன.

### எட்டாத இரவு உணவு

தாக்குதல் தொடரும் வேளை இராணுவத்தினர் இரவு உணவை உண்பதற்கு தயாராக இருந்த அறிகுறிகள் காணப்பட்டன. அங்கு மேசைகளில் உள்ள பாத்திரங்களில் உணவு போடப்பட்டு பரிமாறத்தயார் நிலையில் காணப்பட்டது பெரிய கிடாரங்களில் கடலை ஊறப் போடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

### பெண்களும் இருந்தனர்?

முகாமின் ஒரு அறையில் பெண்கள் அணியும் சில ஆடைகளும், அவர்களுக்குரிய காலணிகளும்காணப்பட்டன.

### சீருடைகள் சிதறிய நிலையில்

முகாமில் இராணுவத்தினரின் பெருமளவு சீருடைகளும் சப்பாத்துக்களும், கவச உடைகளும், நான்கு சோடி மிதிவெடி எதிர்ப்புச் சப்பாத்துக்களும் சிதறிய நிலையில் காணப்பட்டன.

### 'கஜபாகு'வும் இருந்தது

அத்துடன் இராணுவத்தினரின் பல பதிவேடுகளும், அவர்களின் தினப்பதிவுப் புத்தகங்களும் காணப்பட்டன அங்கு காணப்பட்ட தனியான பதிவேடு ஒன்றில் இந்த முகாம் விஸ்தரிக்கப் பட்டதன் பின்னர் கஜபாகு பிரிவைச் சேர்ந்த விசேட பயிற்சிபெற்ற 160 சிப்பாய்களைக் கொண்ட குழுவொன்றும் இங்கு இருந்ததற்கான பதிவுகள் காணப்பட்டன.

### தொடர்பு சாதனங்களும் மீட்பு

இராணுவத்தினர் தமது தொலைத்தொடர்புக்கு பாவித்த அன்ரனா புலிகளின் தாக்குதலினால் சரிந்திருந்தது. அதற்கு அருகில் விசேட பாதுகாப்புடன் குறைவான உயரத்தில் அமைக்கப்பட்ட கொங்கிரீட் கலவையால் அமைக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கருவிகள அடங்கிய அறையொன்றும் காணப்பட்டது இந்த அறையிலிருந்து பெருமளவு தொடர்பு சாதனங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பசிலினால் சென்ரிகள் எரிந்தன

முகாமைச் சுற்றிவர 10 அடி உயரத்தில் பல அடுக்குகளைக் கொண்டதாக சிலிப்பர்க் கட்டைகளால் உருவாக்கப்பட்டிருந்த எல்லைச் சுவர்கள் 'பசிலின் 2000' தாக்குதலினால் பல இடங்களில் எரிந்து சிதறிக்காணப்பட்டன.

முகாமுக்குள் பல இடங்களிலும் பசிலின் 2000 விழுந்து வெடித்ததற்கான தடயங்கள் காணப்பட்டன. அத்துடன் முகாம் பிரதேசத்தில் எக் கட்டிடமும் இனிப் பாவிக்க முடியாதவாறு சேதமடைந்திருந்தன.

### வாகனங்கள் மீட்பு

முகாமின் உள் பகுதியில் நான்கு சில்லுகளும் கழற்றப் பட்ட நிலையில் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப் பட்ட கவச வாகனமொன்று காணப்பட்டது. இதுதவிர சுமார் ஐந்து இராணுவ வாகனங்கள் அந்த முகாமில் பாவனையின் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது அவை தாக்குதலின் பின்னர் கைப் பற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

### விமான ஓடுதளம் அமைக்கும் முயற்சி தோல்வி

முகாமில் ஹெலிக்கப்டர்கள் இறங்கவென அமைக்கப்பட்ட தளத்துக்கருகில் இருந்த 132 கே. வி. மின் கோபுரங்கள் இரண்டு அடியோடு சரிக்கப் பட்டுக் காணப்பட்டன. இப் பகுதியிலேயே சிறிய விமானங்கள் இறங்குவதற்க்கான ஓடுதளம் அமைக்கப்ப விருந்தது.

### கண்டி வீதியில் பாரிய குழி

மாங்குளம்—வவுனியா வீதியில் முகாம் பகுதியில் குண்டு வெடிப்பினால் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. முகாமில் இராணுவத்தினரால் வைக்கப்பட்ட கண்ணிவெடிகள் போராளிகளினால் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதிக்குள் பொது மக்கள் எவரும் செல்வதற்கு அனுமதிக்கப் படவில்லை.

மாங்குளம்—வவுனியா வீதி இன்னும் பாவனைக்காக திறக்கப்படவில்லை. ஆனால் முகாம்இருந்தகாலத்திலமூடப் பட்ட மாங்குளம்—துணுக்காய், மாங்குளம்-முல்லைததீவு வீதிகள்தற்பொழுதுபோராளிகளினால்வாகனபபோக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள் ளன. (35

---

மாவீரர் நினைவாக

## கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களிலும் மாவீரர் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் இறுதிநாளன்று மாவீரர்களின் பெற்றோர்களுக்கு உணவளித்து கௌரவம் அளிக்கப்பட்டது.

இவ்விழாவில் மாவீரர்களின் ஓவியங்கள் தீட்டப்பட்டு பார்வைக்கு வைக்கப் பட்டன.

இந் நிகழ்ச்சிகளின்போது விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. கோபி கிளிநொச்சி கிழக்குப் பொறுப்பாளர் பேபி விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. நிமால் கிளிநொச்சி மேற்குப் பொறுப்பாளர் திரு. இலக்கியன், திரு. நயீர் ஆகியோருடன் மற்றும் பல வன்னிப் பகுதியின் முக்கியஸ்தர்கள், சிற்றூர் அவையினர், பொது மக்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மாவீரர்களின் ஓவியங்கள் கிளிநொச்சி ஓவியர்களில் ஒருவரான அரசரத்தினம் சதீஸ் என்ற சிறுவனால் தீட்டப் பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஓவியங்களைப் பலரும் பாராட்டினர், (35)

## முழங்காவிலில் குண்டு வீச்சு

கடந்த செவ்வாய் இரவு முழங்காவில் பகுதியில் பொம்மர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகின்றது

மாவீரர் தினக் கடைசித் தினமான அன்று இப்பகுதியில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் மீதே தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாகவும் ஆனால் குண்டு இலக்கு மாறி விழுந்தபடியினால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை எனவும் கூறப்படுகிறது. (ப-32)

## கேரளாவில் தற்கொலை அதிகம்

தமிழகத்தில் வருடத்தில் 1 லட்சம்பேருக்கு 11 பேர் வீதம் தற்கொலைமூலம் இறக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. 1986-ம் வருடத்தில் மாத்திரம் 8 ஆயிரத்து 200 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்று புள்ளி விபரக் கணக்கு ஒன்று தெரிவிக்கிறது. கேரளத்தில்தான் ஆகக் கூடுதலாக வருடத்தில் 54 ஆயிரம் பேர் தற்கொலையினால் இறக்கிறாகள்.


## சிறு விளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும்,பாஸ்போட், அடையாள அட்டை புகைப்படங்கள் பிடிக்கவும் கறுப்பு வெள்ளைப் படங்களை 12''X10'' அளவிற்கு பெரிதாக்கவும் நாடவேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல. 351.கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்) நல்லூர். 11116


## திருமலை நியமனங்கள் இனி வெளியாருக்கு இல்லை

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் வெற்றிடங்களுக்கு வெளியார் நியமிக்கப்படக் கூடாது என்று வலியுறுத்தப் பட்டுளளது.

வடக்கு- கிழக்கு மாகாண சபை ஆளுநர்நளின் செனிவிரத்னவே மேற்கண்டவற் புறுத்தலை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் தமிழரை ஒதுக்கும் திட்டத்தின் ஓர் அம்சமே இதுவெனக் கூறப்படுகிறது. (16)


உ

அமரத்துவம் எய்திய

சிவஸ்ரீ கந்தசாமி குருக்கள் நாகராசஐயர்

அவர்களது

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி வைபவம்

(வர்ஷாப்திகம்)

நாளை 1.12.90 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15. 12. 1945 | 11. 12. 1989 |

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சும்.

பெரியகேணிப் பிள்ளையார் கோவிலடி, எழுதுமட்டுவாள் தெற்கு.

மனைவி, மைந்தர்கள்,

11130

# இடம் பெயர்ந்தவர்களின் தபாற்களைப் பெறுமாறு அறிவிப்பு

அண்மையில் கப்பலில் வந்த தபாற் பொதிகள் யாவும் யாழ் பிரதம தபாலக ஊழியர்களால் தரம் பிரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுவிட்டதாகவும், இடம்பெயர்ந்தவர்களது உள்ளூர், வெளியூர் சாதாரண தபாற்களும், பதிவுத் தபாற்களும் தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் தபாற் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் பிரதம தபாலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் ஊரடங்கு வேளையிலும் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்து வருவதையிட்டும், ஊழியர்கள் வரவு அதிகரித்ததையிட்டும் பல பொதுஸ் தாபனங்கள் பாராட்டியுள்ளன.

யாழ் பிரதம தபாலக தபால் விநியோகப்பகுதியில் இடம் பெயர்ந்தவர்கள் தமக்குரிய தபாற்களை இன்று தொடக்கம் காலை 10. 30 மணிமுதல் முற்பகல் 12 மணிவரை வந்து பெற்றுக் கொள்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# முத்திரைக்கு தட்டுப்பாடு ஏற்பட தனியார் கடைக்காரர் காரணம்

தபாற்கந்தோர்களில் முத்திரைகளுக்கு எந்தவித தட்டுப்பாடும் ஏற்படக்காரணம் இல்லை என்றும், சில தனியார் கடைக்காரர்கள் ஆட்களை அனுப்பி முத்திரைகளை அதிகமாகக் கொள்வனவு செய்து கடைகளில் வைத்து அதிக விலைக்கு முத்திரைகளை விற்கிறார்கள் என்றும் தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உரிய விலையில் முத்திரைகள் விற்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலை இங்கு உருவாக்கப்பட்டால் முத்திரைக்கு தட்டுப்பாடு ஏற்பட நியாயம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## கலை நிகழ்ச்சி

யாழ் பல்கலைக்கழக மறுபலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 9 மணி முதல் பரதநாட்டியம், வில்லிசை, வயலின் கச்சேரி, வீணை இசை, நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க கலந்துரையாடல்

யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமைகாலை 10 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலிற்கு மேற்படி மாவட்டத்தின் சகல மாணவர் இயக்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## மல்லாகத்தில் நாளை நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்

நாளை 1-ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் மல்லாகம் நீதி மன்றத்தில் விசர் நாய் தடுப்பூசி போடப்படவுள்ளது.

இதனால் அப்பகுதியிலுள்ள மக்களனைவரையும் தமது நாய்களைக் கொண்டு வந்து ஊசியைப் போடுமாறு சுகாதார அத்தியட்சகர் கேட்டுள்ளார். (48)

### பத்துத் தலைமுறை...

மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் பத்துப்பரம்பரைவரை தொடர்ந்து முறிவு தறிவு வைத்தியத்துறையிலே தந்நிகரற்று விளங்கியோரின் மனப்பான்மையின் உன்னதத்தை மேற் குறித்த தத்துவ நியமனம் நன்கு எடுத்துக் காட்டவில்லையா?

எனினும் இடைக்காலத்தில் (கடந்த இரண்டு ஆண்டுகளாக) வைத்தியசாலை உரிமை வழக்குகள் நிகழ்ந்தும், வைத்தியசாலையின் பெயரைச் சொல்லிப் போலிகள் ஆங்காங்கு வைத்தியம் நடத்தியும் இதன் உன்னத பாரம்பரியத்தைக் கறைப்படுத்த முயன்றது பெருங் கவலைக்கு உரியதே. ஆனால் பண்டிதர் அவர்களின் தூய ஆன்மாவின் சத்தியானது இன்று வைத்தியசாலையின் மேலாளராய் விளங்கும் டாக்டர் ஏகாம்பரநாதன் உமாகாந்தனிலே பிரவேசித்து இடர்களை எல்லாம் களைய வைத்து அவரை அவரது முன்னோர் வழியில் நெறி பிறழாது வைத்தியசாலையை நடத்திச் செல்ல வைத்துள்ளது என்பது பெரிதும் மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

டாக்டர் ஏ. உமாகாந்தன் அவர்கள் முறிவுதறிவு வைத்தியம், அது சார்பான சத்திரசிகிச்சை என்பவற்றில மிகத் திறமை படைத்து விளங்குவது கண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சித்த வைத்திய பீடம் அவரை அத்துறையிலே அதிதி விரிவுரையாளராக நியமித்திருப்பதோடு, அவரது வைத்தியசாலையைப் பயிற்சிக் களமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளது.

கைதடியில் இருக்கும் சித்த மருத்துவத் துறையின் போதனா வைத்தியசாலையில் முறிவு தறிவுப்பிரிவு 30.11.90 காலை திறந்து வைக்கப்படுகிறது. டாக்டர் ஏ. உமாகாந்தன் அதற்குப் பொறுப்பாக இருப்பார். பொதுமக்கள் ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் அங்கு சிகிச்சை பெறலாம்.

பொது மக்களுக்கும் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்க்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும்.


## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்ப்பதில் அனுபவமுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. தமிழில் சுயமான படைப்பாற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. 1104 மே/பா முரசொலி

11157


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெப் நிறுவனத்தினரால் யாழ். கஸ்தூரியார்காடு டச்சுவீதி 'லக்ஷமிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 30-11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### பாராளுமன்றத்தில் ஸ்ரீமாவோ குற்றச்சாட்டு

# தப்பியோடிய படையினரை காப்பாற்ற அரசு தவறிவிட்டது

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட ச[ம்ப]வம் குறித்து எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்[க] நேற்று பாராளுமன்றத்தில் பிரச்சினை கிளப்பினார்.

இது தொடர்பாக அவர் பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றையும் விடுத்தார்.

மாங்குளம் முகாமில் இருந்த படையினரின் நிலைமைகள் குறித்துத்தான் மிகவும் கவலை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இச்சம்பவத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்றும் அவர் வினாவினார்.

காட்டிற்குள் தப்பி ஓடிய படையினரைக் கூட காப்[பாற்]றுவதற்கு போதிய ெ[...] கப்படர்களை அரசு அ[...] வில்லை என்றும் அவர் [...]றம் சாட்டினார்

## உதவி ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) அலுவலகத்தில் 8-ம் திகதியில் நடைபெற்ற ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர்கள, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாநாட்டில் அறிவித்தபடி உரிய கணக்கறிக்கைகள், புள்ளி விபரங்கள் ஆகியவற்றுடன் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ் கூட்டுறவு அலுவலகத்துக்கு சமுகமளிக்கும்படி சகல ப.நோ.கூ சங்கப் பொது முகாமையாளர்களையும், சகல கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) கேட்டுக் கொள்கிறார்.

1987-ம் ஆண்டு வன்செயலின் போது ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு அங்கீகரிக்கப்பட்டு, உரிய நட்டஈட்டுத் தொகைகளை இதுவரை பெறாத சங்கங்கள் தத்தமது உறுதிச் சிட்டைகளையும் பூரணப்படுத்திக் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (66)

## 2500 ரவைகள் பூநகரியில் மீட்பு

நேற்று முன்தினம் பூநகரியில் உள்ள இடிந்த கோட்டையில் கற்களை ஏற்றிக் கொண்டிருந்த பொது மக்கள் 2500 நேட்டோ ரவைகளைக் கண்டெடுத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர். மேற்படி கோட்டை ராணுவமுகாம் 1987-ல் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டமை தெரிந்ததே.

### வாக்குறுதியை...

மாகாணசபைக்கு பொறுப்பாகவிருந்த தமிழ்க் குழுவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதும் பிரச்சினை எழக் காரணமாயின.

இயக்கப்பிரதிநிதிகள் 1989 அக்டோபரில் தாம் ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்தபோது தெற்கில் தாம் சந்தித்த அறிவு ஜீவிகள், திருச்சபை உறுப்பினர்கள், பழமைவாதிகள், முற்போக்காளர்கள் என்ற பல தரப்பினரும் இங்கே இனவாதம் இருப்பதை மறுப்பதில் தம் சக்தி அனைத்தையும் செலவிடுவதாகவும் ஆனால் அவர்களுடைய சமாதானங்களும் மறுப்புக்களும் உலகெங்கும் உள்ள இனவாதிகளின் குரலாகவே ஒலிக்கிறதென்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"சிங்கள பௌத்த அரசு என்ற கோட்பாடு இன்னொரு சிறுபான்மை இனம் தலையெடுப்பதைச் சகிப்பதில்லை. நிச்சயமாக தனது சுயநிர்ணய உரிமையைக் கோரும் ஒரு இனத்தை அது அனுமதிக்க மறுக்கிறது.

வடக்கு கிழக்கில் அதிகாரப் பரவலாக்கல் என்பதை பௌத்த சிங்கள அரசுபற்றிய தமது கனவுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

## வீர மரணம்

நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணியளவில் ஊர்காவற்[று]றை இராணுவத்தினருட[ன்] ஏற்பட்ட பலத்த மோதல[ில்] விடுதலைப்புலிகள் தரப்[பில்] 2 போராளிகள் வீரமர[ண]மடைந்தார்கள். இராணு[வ] தரப்பில் சேத விபரங்க[ள்] தெரியவில்லை.

வீரமரணமடைந்த சிறி (முத்தையா மகேந்திரராசா, சுருவில் புளியங்கூடல், ஊ[ர்கா]வற்றுறை), வதனன் (க[...] கேசு பலேந்திரன் கரு[...] காரைநகர்) ஆகியோ[...] விடுதலைப்புலிகள் வீர[...] கத்தைத் தெரிவி[த்துக்] கொள்கின்றனர்.

### கட்டாக் காலி.

அல்லல்படுகின்றார்கள். இந்நிலையில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது, நாய் வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் நாய்களை வீட்டில் கட்டி வளர்ப்பதுடன் வளர்ப்பு நாய் என்பதற்கு அடையாளமாக கழுத்துப்பட்டியை நாய்க்கு அணிவித்தல் வேண்டும் என விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட செயலகம் கேட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை எம்மால் 1990 - 12 - 05 இல் இருந்து மேற்கொள்ளப்ப[ட]வுள்ளது. அடையாளம[ற்ற] நாய்களைப் பிடித்து வி[டுத]லைப் புலிகள் மக்கள் மு[ன்]னணி பிரதேச அல்லது பிரிவு செயலகத்தில் ஒப்படைத்து ஒரு நாய்க்கு ரூபா ஐந்து வீதம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (71

### தொண்டர்—

வழங்கப்படுமெனவும், அவர்களும் 1000 ரூபா சம்பளத்தில் மூன்று வருடகாலம் பயிற்சி பெற்றபின்பே நிரந்தர ஆசிரியர்களாக சேர்க்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போலிச் சான்றிதழ்கள் சமர்ப்பித்து 5000 பேர் தொண்டர் ஆசிரியர் நியமனம்பெற்றுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

### கிளிநொச்சியில்...

3-ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் விவசாய பீடத்திற்குத் தெரிவான அனைத்து மாணவரும் 2-ம் திகதி காலை இரணைமடுச்சந்தியில் உள்ள விவசாயத் திணைக்கள பயிற்சி நிலைய பீடாதிபதியைச் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

மாணவர்கள் கிளிநொச்சியில் தங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள கலாநிதி எஸ். மோகனதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பயிற்சிக்..

கான நேர்முகப் பரீட்சையைக் கொழும்பில் நடத்தாது அந்தந்த ஆசிரியர் கலாசாலைகளிலேயே நடத்துமாறு இச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (74)

### மாவீரர்களின்...

நிறைவேறுகையில் தான் மக்களைச் சந்திப்பேன் எனஅவர் கூறியதாகவும் இறந்தமாவீரர்களில் பெற்றோர்களையாவது சந்தித்தால் என்ன என்றுதான கேட்டபோது அவர் அதற்குச் சம்மதித்ததாகவும் கலாநிதி பாலசிங்கம் மேலும் கூறினார். (39)


தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க[ம்]

(வரையறுள்ளது)

கூட்டுறவாளர், தேச பக்தர்

## தியாகி கருணானந்தசிவம்

# நினைவு தினம்

ஊழியர்களைக் கௌரவித்தல் வைபவ[ம்]

## அழைப்பிதழ்

எமது சங்கம் நெருக்கடியான கால கட்டத்தில் சிற[ப்]பாகக் கடமையாற்றிய ஊழியர்களையும், சங்கத்தி[ல்] இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகப்பணியாற்றி[ய] ஊழியர்களையும் கௌரவிக்கின்றது. இவ் வைபவ[த்தை] திறகு இயக்குநர்சபை உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள் கூட்டுறவாளர்களையும் பணியாள[ர்]களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கி[ன்]றேன்.

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம்

மருதனாமடம்.

காலம்: 04-12-1990 செவ்வாய்க்கிழமை

பி. ப. 2-00 மணி

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்தி[ல்] கூட்டுறவாளர்கள் நடாத்திய போட்டிகளில் முதலிட[ம்] பெற்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

சி. சிவமகாராசா,

தலைவர்,

தெல்லி ப. நோ. கூ. சங்க[ம்]

தெல்லிப்பளை.

29. 11. 1990

111